சிலப்பதிகாரம்

*வினா.—திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-66-க்கான (S.S.L.C.) இந்தி பாட புத்தகத்தில் (குல்தஸ்த்தா) சிலப்பதிகாரத்தை ஓரங்க நாடகமாக எழுதியதில், பாண்டிய மன்னனை (நெடுஞ்செழியன்) குடிகாரனாகவும், பாண்டி மாதேவியின் இரண்டு சிலம்புகளுமே களவு போயிற்று என்றும் சிலப்பதிகாரத்தின் சிறப்பையே மாற்றி எழுதப்பட்டு இருப்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) நாடகத்தை மேலும் விறுவிறுப்பாக்குவதற்காக ஆசிரியர் அதிக உரிமை எடுத்துக்கொண்டு கதையை மாற்றியுள்ளதாகத் தெரிகிறது. இப்புத்தகம் இப்போது பள்ளிகளில் பாட புத்தகமாக பயன்படுத்தப்படுவதில்லை.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்தப் பாடப் புத்தகத்தைத் திருத்தி, நல்ல கருத்து தோன்றும் முறையில் எழுதுவதற்கு இந்த அரசு வழிவகை செய்வார்களா? அதைத் திருத்தாவிட்டால், மற்ற மாநிலங்களில் இதுபோன்ற தவறான பிரச்சாரம் செய்வதற்கு வழிவகை இருக்காதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தப் புத்தகத்தை பாடப் புத்தகத்திலிருந்து அறவே எடுத்தாகிவிட்டது, அந்தப் புத்தகத்தை எழுதிய ஆசிரியருக்கு உண்மைக் கருத்துக்களைத் தெரிவிக்கின்ற முறையில் முயற்சிகள் எடுத்துக்கொள்ளலாம்.

திரு. சா. மெய்யப்பன் : அதுமாதிரி, தமிழர்களுடைய பண்பாட்டை இழிவுபடுத்தும் முறையில் நீதிக்குப் பேர்போன பாண்டியனை குடிகாரன் என்பதாகச் சித்தரித்து நூல் எழுதிய ஆசிரியரின்மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அப்படி எந்த ஆசிரியரும் வேண்டுமென்று பழி சுமத்தியிருப்பார் என்று கருதத் தேவையில்லை. அவருக்குத் தவறான தகவல்கள் கிடைத்திருக்கலாம். தம் தவறைத் திருத்திக்கொள்ள நாம் அவருக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும்.

Officers brought over to Industries Department

*4 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of officers brought from the Electricity Department to the Industries Department;

(*b*) the different dates on which they were brought to the Industries Department;